# மத்திய அரசுக்கு ரூ.25,000 கோடி இழப்பு?: அலைவரிசை தொகுப்பு ஒதுக்கீட்டில் ஆ. ராசாவின் குளறுபடி

நமது சிறப்பு நிருபர்



சென்னை, அக்.2: அமெரிக்காவில் கடந்த ஜனவரி மாதத்தில் செல்போன் மற்றும் இன்டர்நெட் சேவைகளுக்கான அலைவரிசைத் தொகுப்பு (spectrum) சுமார் ரூ.90 ஆயிரம் கோடிக்கு விற்கப்பட்டிருக்கிறது. அதே சமயத்தில் இந்தியாவிலும் அலைவரிசைத் தொகுப்பு விற்கப்பட்டிருக்கிறது. எவ்வளவுக்குத் தெரியுமா? வெறும் ரூ.1650 கோடிக்கு.

''முதலில் கேட்பவருக்கு, முதலில் அனுமதி'' என்ற அடிப்படையில் இந்த அனுமதி தரப்பட்டது. தொலைபேசி சேவை தருவதற்கு ஏற்கெனவே உரிமம் பெற்று வைத்திருக்கும் 'ஸ்வான் டெலிகாம்' நிறுவனத்தின் மதிப்பு இப்போது மூன்று மடங்கு உயர்ந்துவிட்டது. இதற்குக் காரணம் மேற்படி அலைவரிசைத் தொகுப்புக்குக் கிடைத்த அனுமதிதான்.

இந் நிறுவனம் ரூ.1,539 கோடியைக் கட்டணமாகச் செலுத்தியது. இன்னும் சேவையைத் தொடங்கவே இல்லை. ஒன்பதே மாதங்களில் இதன் மதிப்பு ரூ.5,000 கோடியாக மாறிவிட்டது.

எஸ்ஸார் குழுமத்தின் மூலம் தொடங்கப்பட்டுள்ள லூப் டெலிகாம் நிறுவனம் புதிதாக இச் சேவையில் நுழைகிறது. இதுமட்டுமின்றி டேட்டாகாம், ஷியாம் டெலிலிங்க், யுனிடெக் ஆகியவையும் புதிய வரவுகள். ஏற்கெனவே இச் சேவையில் இருக்கும் டாட்டா டெலிசர்வீசஸ், ரிலையன்ஸ் நிறுவனங்களும் அலைவரிசைத் தொகுப்பு ஒதுக்கீட்டைப் பெற்றுள்ளன.

இதையே ஏலம் மூலம் விட்டிருந்தால் மத்திய அரசின் தொலைத்தொடர்புத் துறைக்கு குறைந்தது ரூ.25 ஆயிரம் கோடியாவது கூடுதல் வருமானம் கிடைத்திருக்கும் என்று துறை வல்லுநர்கள் தெரிவிக்கின்றனர். வருமான இழப்புக்கு மத்திய அமைச்சர் ஆ. ராசாவின் முடிவுதான் காரணம் என்பது பலரின் கருத்து.

இந்தியாவில் செல்போன் சேவை மிகவேகமாக வளர்ந்து வருவதால், செல்போன் நிறுவனங்களுக்குக் கூடுதல் அலைவரிசைகள் தேவைப்படுகின்றன. உரையாடல், இன்டர்நெட் சேவையில் தகவல் பரிமாற்றம், புகைப்படம், விடியோ பரிமாற்றம் ஆகியவற்றுக்கெல்லாம் அதிக அளவில் அலைவரிசை ஒதுக்கீடு பெற்றிருந்தால் மட்டுமே நிறைய பேருக்கு நிறைவான சேவையை அளிக்க முடியும்.

அதனால்தான் அலைவரிசை ஒதுக்கீட்டைப் பெற நிறுவனங்கள் போட்டிபோடுகின்றன. இதற்கான ஒதுக்கீட்டைப் பொருத்தவரை நிலையற்ற கொள்கையைத்தான் மத்திய தொலைத்தொடர்புத்துறை பின்பற்றுகிறது.

மூன்றாம் தலைமுறை தொழில்நுட்ப சேவைக்கான அலைவரிசை தொகுப்பை ஒதுக்குவதென முடிவு செய்தபோது இந்தியாவில் உள்ள நிறுவனங்களுக்கு முன்னுரிமை என்று தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையம் கூறியது. ஆனால், பின்னர் வெளி நாட்டு நிறுவனங்களுக்கும் அனுமதி, ரிலையன்ஸ் போன்ற சி.டி.எம்.ஏ. தொழில்நுட்பம் பயன்படுத்தும் நிறுவனங்களுக்கும் அனுமதி, பங்குதாரர் அடிப்படையில் அனுமதி என்றெல்லாம் அவ்வப்போது வசதிக்கேற்ப கொள்கைகள் மாற்றப்பட்டன.

இதனால், குறைந்த கட்டணத்தைச் செலுத்தி இப்போதைக்கு அலைவரிசைத் தொகுப்பை வாங்கி வைத்துக் கொள்வோம் என நிறுவனங்கள் இறங்கியுள்ளன. பெரிய தொழில் முதலாளிகள் வேறு நிறுவனங்களின் பெயர்களில் இவ்வாறு அலைவரிசைத் தொகுப்பை பிடித்து வைத்துக் கொண்டனர். அதை இனி யாரும் பயன்படுத்த முடியாது.

தொலைத்தொடர்பு நிறுவன சேவை விரிவாக்கத்துக்கு அலைவரிசை கூடுதலாகத் தேவைப்படும் போது தங்களிடம் உள்

ள அனுமதியை நல்ல விலைக்கு விற்கலாம். இதன்மூலம் இந்த நிறுவனங்கள் லட்சம் கோடி ரூபாய்க்கு மேல்கூட சம்பாதிக்க முடியும்.

பங்குச் சந்தையில், பொருள் வணிகத்தில் குறைந்த விலைக்கு வாங்கி இருப்பு வைத்துவிட்டு, லாபகரமான விலை வரும்போது விற்பதைப் போலத்தான் இதுவும்.

நம்மிடம் உள்ள அலைவரிசைத் தொகுப்பை நல்ல முறையில் பயன்படுத்தி மக்களுக்கு தொலைத்தொடர்பு சேவை அளி ப்பதற்குப் பதிலாக, இதை தனியாரின் வியாபாரப் பொரு ளாக்கிவிட்டது மத்திய தொலைத் தொடர்புத் துறை என்று மூத்த அதிகாரிகள் வருந்துகின்றனர்.

போட்டியை உருவாக்கி ஏலம் மூலம் விற்றால் இதன் மூலம் பல்லாயிரம் கோடி ரூபாய் அரசுக்கு வருமானமாகக் கிடைக்கும். என்ன காரணத்தாலோ அப்படியொரு முயற்சியை மத்திய தொலைத்தொடர்புத் துறை எடுக்கவில்லை.